நகராட்சி அலுவலகம்,
களக்காடு.
நாள். 22.05.2025.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2025ம் வருடம் மே மாதம் 30ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>30.05.2025</td><td>603</td><td><u>மன்றப்பொருள்: 01</u><br>களக்காடு நகராட்சி பொதுநிதியின் கீழ் (2024–2025) கீழ் நகர்மன்றத்தால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 24.04.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்திற்கு இப்பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பில் நகராட்சிக்குட்பட்ட 11 இடங்களில் உள்ள குட்டை கோபுரங்களில் , பழுதடைந்த 150 வாட், 90 வாட் விளக்குகளை மாற்றம் செய்து புதிதாக ஒளிர் திறன் கொண்ட (LED) விளக்குகளை சப்ளை செய்து நிறுவி இயக்கி தரும் பணி.</td><td rowspan="2">9.20</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்.</td><td>மதிப்பீட்டு விலைக்கு</td></tr>
<tr><td>திருமதி. என்.எம் புஷ்பம்</td><td>0.96% (கூடுதல்)</td></tr>
</table></td><td>குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய 1. ஜஸ்டின் பிரதீப், 2.என்.எம்.புஷ்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 07 கீழக்கருவேலன்குளம் ஆட்டோ ஸ்டாண்டு அருகில் உள்ள சிறுநீர் கழிப்பிடத்திற்கு ஆழ்துளை கிணறு அமைத்து, மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணி.</td><td rowspan="2">1.50</td><td>திரு. J.ஜஸ்டின் பிரதீப்.</td><td>1.61% (கூடுதல்)</td></tr>
<tr><td>திருமதி. என்.எம் புஷ்பம்</td><td>0,02% குறைவு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.05.2025</td>
<td>604</td>
<td>
<u>மன்றப்பொருள்: 02</u>
களக்காடு நகராட்சிப்பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களின் இனப்பெருக்கத்தை தடுக்கும் வகையில் உரியவாறு நாய்களை பிடித்து கருத்தடை செய்ய போதுமான கட்டுமான வசதிகள் இல்லை என்பதால் ஏற்கனவே இதற்காக சிதம்பராபுரத்தில் உள்ள கட்டிடத்தினை கூடுதல் வசதிகளுடன் சீரமைக்க ரூ. 15.00 லட்சத்திற்கு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரது முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு:</u>
மன்றம்அனுமதிக்கலாம்.
இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புக்கொள்ளலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.05.2025</td>
<td>605</td>
<td>
<u>மன்றப்பொருள்: 03</u>
களக்காடு நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2023-2024ன் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட கழிவு நீர் தொட்டி வாகனத்தினை மூன்றாம் தரப்பு ஆய்வு செய்து அறிக்கை செய்ய நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதன் பொருட்டு மூன்றாம் தரப்பு ஆய்வு மேற்கொள்ள அரசு பொறியியல் கல்லூரியினை கேட்டுக்கொண்டதன் பேரில் கல்லூரரி முதல்வரின் கேட்பு படி ரூ. 17700/-ஐ செலுத்த
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புக்கொள்ளலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.05.2025</td>
<td>606</td>
<td><u>மன்றப்பொருள்: 04</u><br>களக்காடு நகராட்சிக்கு 2025–2026 ஆம். நிதியாண்டில் நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் (NSMT) கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்கண்ட பணிகளுக்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக 28.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்றய தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கப்பட்டு இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்த தாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண்.05, பத்தை தெற்கு தெரு, பத்தை கிழக்கு தெரு, பத்தை முதல் குறுக்கு தெரு, மற்றும் வார்டு 10, பாரதிபுரம் மேற்கு தெற்கு தெரு, வார்டு எண். 18 கோட்டை யாதவர் கிழக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல், மற்றும் வார்டு எண். 23 கம்போஸ்ட் ரோட்டில் தார் சாலை அமைக்கும் பணி.</td><td rowspan="2">43.00</td><td>திரு. பி. மாடசாமி,</td><td>0.16% ( குறைவு)</td></tr>
<tr><td>திருமதி. எஸ். பொன் மலர்</td><td>0.03% (குறைவு)</td></tr>
</table></td>
<td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி.S.பொன்மலர் அவர்களது ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>

<u>**அலுவலக குறிப்பு:**</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.<br>ந.க.எண்.756/2025/இ1

</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.05.2025</td>
<td>607</td>
<td>

<u>**மன்றப்பொருள்: 05**</u>

களக்காடு நகராட்சிக்கு 2025-2026 ஆம். நிதியாண்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்கண்ட பணிகளுக்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக 28.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்றய தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கப்பட்டு இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 01, அம்பேத்கர் நகர் முதல் மூங்கிலடி ரோடு வரையில் வார்டு எண். 20 வியாசராசபுரம் பஸ்டாண்டு மாணிக்கம் குளம் கீழத்தெருவில் தார் சாலை அமைக்கும் பணி.</td><td rowspan="2">183.00</td><td>திரு. பி. மாடசாமி,</td><td>0.04% (குறைவு)</td></tr>
<tr><td>திருமதி. எஸ். பொன்மலர்</td><td>0.19% (குறைவு)</td></tr>
</table>

</td>
<td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மாடசாமி அவர்களது ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td></td>
<td>

<u>**அலுவலக குறிப்பு:**</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம். ந.க.எண்.607/2025/இ1

</td>
<td></td>
</tr>
</table>

<table>
<tr>
<td>30.05.2025</td>
<td>608</td>
<td>

**<u>மன்றப்பொருள்: 06</u>**

தமிழக அரசின் நான்கு ஆண்டு சாதனைகளாக இந்நகராட்சிப்பகுதிகளில் நடைபெறும் திட்டம் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்து கீழ்கண்ட நாளிதழின் சிறப்பு மலரில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு ரூ. 9828/ சம்பந்தப்பட்ட நாளிதலுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>நாளிதழ் பெயர்</th><th>பில் எண் மற்றும் நாள்.</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>தினகரன்</td><td>3300548511<br>நாள்<br>07.05.2025</td><td>ரூ. 9828</td></tr>
</table>

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண். 270–2/2023/இ1)

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.05.2025</td>
<td>609</td>
<td>

**<u>மன்றப்பொருள்: 07</u>**

களக்காடு நகராட்சிக்கு சொந்தமான குளங்கள் மீன் பாசி குத்தகை உரிமம் மற்றும் மரங்களின் மகசூல் அனுபவிக்கும் உரிமம் 30.04.2025ல் காலாவதியாகிவிட்டது எனவும் மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு மீண்டும் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரும்படி வருவாய் ஆய்வாளரின் 28.04.2025ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குத்தகை இனங்களுக்கு குத்தகை விதிமுறைகளின்படி ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டியது அவசியமாகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>குத்தகை விபரம்</th><th>வைப்புத்தொகை</th></tr>
<tr><td>1.</td><td>களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குளங்களில் மீன்பாசி உரிமம்</td><td>ரூ. 50,000</td></tr>
<tr><td>2.</td><td>களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மரங்களில் மகசூல் அனுபவிக்கும் உரிமம்.</td><td>ரூ. 38,000</td></tr>
</table>

</td>
<td>அரசு விதிகளின்படி செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td></td>
<td></td>
<td>

மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழில்

</td>
<td></td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வெளியிடுவதற்கான விளம்பர கட்டணம் வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 892/2025/அ1. | |
| 30.05.2025 | 610 | **<u>மன்றப்பொருள்: 08</u>**<br>கடந்த 2023–2024 ஆம் ஆண்டு பெய்த அதிக கனமழையின் காரணமாக இந்நகராட்சிப்பகுதிகளில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க அரசுக்கு கருத்தரு சமர்ப்பிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 31442/2021/SS3 நாள். 14.03.2025ன்படி மாநில பேரிடர் மீட்பு நிதியாக (SDRF FUND) இந்நகராட்சிக்கு ரூ. 12.84 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிதியினை பயன்படுத்தும் வகையில் பெருமழையின் காரணமாக சேதமடைந்த சாலைகளில் ஒன்றான வார்டு எண். 10 சிவசண்முகபுரம் தெற்கு தெரு (கீழ்பகுதி) தெருவில் 12.84 லட்சம் மதிப்பீட்டில் தார் தளம் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம், மேற்கண்ட பேரிடர் மீட்பு நிதியினை பயன்படுத்த மன்றம் ஒப்புக்கொள்ளலாம். ந.க.எண். 892/2025/அ1. | அரசு விதிப்படி பேரிடர் மீட்பு நிதியினை பயன்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டது. |
| 30.05.2025 | 611 | **<u>மன்றப்பொருள்: 09</u>**<br>களக்காடு நகராட்சியில் 2025–2026 ஆம் நிதியாண்டில் நகராட்சி பொதுநிதியின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான நிருவாக அனுமதிக்காக இப்பொருள் மன்றதிற்கு வைக்கப்படுகிறது. | அரசு விதிப்படி செயல்பட அனுமதிக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீடு ரூ. லட்சத்தில். |
|---|---|---|
| 1. | களக்காடு நகராட்சி வார்டு எண். 6 சங்கர் நகர், மற்றும் ரைஸ்மில் தெருவில் சாலைகள் அமைக்கும் பணி. | 10.00 |
| 2. | களக்காடு நகராட்சி வார்டு எண்.5 மேலகருவேலன்குளம், நடராஜர் சன்னதி மற்றும் அதனை ஒட்டிய இரண்டு மண் சாலைகளை தார் சாலையாக அமைத்தல். | 15.00 |
| 3. | களக்காடு நகராட்சி வார்டு எண்.6ல் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி செய்யும் பொருட்டு புதிய ஆழ்குழாய் அமைக்கும் பணி, மற்றும் வார்டு எண். 17 காந்தி வீதியில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணி. | 3.00 |
| 4. | களக்காடு நகராட்சி வார்டு எண். 3 கீழப்பத்தையில் உள்ள பொது கிணற்றினை துரர் வாரி சீரமைக்கும் பணி. | 1.00 |
| 5. | களக்காடு நகராட்சிக்கு அனைத்து அலுவலர்களுக்கும் கணனி மற்றும் பிரின்டர்,ஸ்கேனர் இதர கணனி சார்ந்த உபகரண்ங்கள் கொள்முதல் செய்யும் பணி | 5.00 |
| 6. | களக்காடு நகர்மன்ற தலைவர்களாக பணியாற்றியவர்கள் குறித்த தகவல் பலகை அமைத்தல். | 0.10 |
| 7. | களக்காடு நகராட்சி அலுவலகத்தில் முக்கிய இடங்களில் CCTV கேமிரா மற்றும் அதன் சார்ந்த மின்னனு சாதனங்கள் கொள்முதல் செய்து நிறுவுதல். | 1.00 |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு நிருவாக அனுமதி வழங்கலாம், நகராட்சி நிதிநிலைமைக்கு ஏற்ப அவசர அவசியத்தின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 478–7/2025/இ1

| | | | |
|---|---|---|---|
| 30.05.2025 | 612 | **மன்றப்பொருள்: 10**<br>களக்காடு நகராட்சியின் 2024–2025ஆம் நிதியாண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>**24-25 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை**<br><br>**1.ஆட்சி எல்லை :**<br>இந்நகராட்சி ஆட்சி செலுத்தும் களக்காடு நகரம் மேற்கு தொடர்ச்சி பொதிகை மலையடிவாரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. எழில்மிகு தலையணை நீர்வீழ்ச்சி மற்றும் களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலயம் ஆகியவை கொண்டுள்ளது. இந்நகராட்சி பகுதியில் 8 வருவாய் கிராமங்கள் இருந்து வருகிறது. இந்நகர் வளர்ச்சியடைந்து சிறப்புநிலை பேரூராட்சியில் இருந்து பின்னர் இரண்டாம் நிலை நகராட்சியாக அரசு ஆணை எண். 94, நாள். 01.11.2021ன் படி தரம் உயர்த்தப்பட்டுள்ளது.<br>**அமைப்பு :**<br>களக்காடு நகராட்சியின் மொத்த நகர பரப்பளவு **17.00** சதுர கிலோ மீட்டர் ஆகும்.<br><br>இந்நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி குக்கிராமங்கள் அமைந்துள்ளது.<br><br>• புதுக்கிராமம்<br>• வடமலை சமுத்திரம்<br>• தென்கரை<br>• கீழக்கருவேலன்குளம்<br>• மேலக்கருவேலன்குளம்<br>• தம்பிதோப்பு<br>• சிங்கம்பத்து<br>• சிதம்பராபுரம்<br>• கக்கன்நகர்<br>• மூங்கிலடி<br>• சிவபுரம் கலுங்கடி<br>• மேலப்பத்தை<br>• அம்பேத்கர்நகர்<br>• பச்சாந்திரம்<br>• மஞ்சுவிளை<br>• கீழப்பத்தை<br>• சிவசண்முகபுரம்<br>**மக்கள் தொகை**<br>**2011** ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகரத்தின் மொத்த மக்கள் தொகை **30921** ஆகும். இதில் ஆண் **15122** மற்றும் பெண் **15799** ஆகும். **தற்போதைய மக்கள் தொகை 34632 ஆகும்**. | அனுமதிக்கப்பட்டது. |

வார்டு எண். 1, 8, 10 – ஆதிதிராவிடர் பெண்ணுக்கும், வார்டு எண். 4, 14 – ஆதிதிராவிடர் பொது மற்றும் வார்டு எண். 7, 9, 18, 20, 21, 22, 23, 24, 25, 26, 27 ஆகிய **11** வார்டுகள் பெண்களுக்காக(பொ)வும் ஒதுக்கப்பட்டது. வார்டு எண். 2, 3, 5, 6, 11, 12, 13, 15, 16, 17, 19 ஆகிய **11** வார்டுகள் பொதுவாக ஒதுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| நகர்மன்ற தலைவர் | | திருமதி. கா. சாந்தி (10வது வார்டு உறுப்பினர்) |
| நகர்மன்ற துணைத்தலைவர் | | திரு. பி.சி. ராஜன், (12வது வார்டு உறுப்பினர்) |
| வ. எண். | உறுப்பினர்கள் பெயர் | வார்டு எண். |
| 1. | திருமதி. செ. பிரேமா | 1வது வார்டு உறுப்பினர் |
| 2. | திரு. பா. சிம்சோன்துரை | 2வது வார்டு உறுப்பினர் |
| 3. | திரு. பா. இஸ்ரவேல் | 3வது வார்டு உறுப்பினர் |
| 4. | திருமதி. அ. நளினி | 4வது வார்டு உறுப்பினர் |
| 5. | திரு. சி.இராமச்சந்திரன் | 5வது வார்டு உறுப்பினர் |
| 6. | திரு. சு. முருக பெருமாள் | 6வது வார்டு உறுப்பினர் |
| 7. | திருமதி. வெ. சோமசுந்தரி | 7வது வார்டு உறுப்பினர் |
| 8. | திருமதி. சு. பாலசுகன்யா | 8வது வார்டு உறுப்பினர் |
| 9. | திருமதி. அ. கதிஜா பர்வீன் | 9வது வார்டு உறுப்பினர் |
| 10. | திருமதி. கா. சாந்தி | 10வது வார்டு உறுப்பினர் |
| 11. | திரு. சூ. சுப்பிரமணியன் | 11வது வார்டு உறுப்பினர் |
| 12. | திரு. பி.சி. ராஜன் | 12வது வார்டு உறுப்பினர் |
| 13. | திரு. ரா. ராஜன் | 13வது வார்டு உறுப்பினர் |
| 14. | திரு. சு. ஜெகநாதன் | 14வது வார்டு உறுப்பினர் |
| 15. | திரு. தி. முருகேசன் | 15வது வார்டு உறுப்பினர் |
| 16. | திரு. ஆ. பூதத்தான் | 16வது வார்டு உறுப்பினர் |
| 17. | திரு. சொ. சங்கர நாராயணன் | 17வது வார்டு உறுப்பினர் |
| 18. | திருமதி. மு. சங்கரி | 18வது வார்டு உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ஹ. முகம்மது அலி ஜின்னா | 19வது வார்டு உறுப்பினர் |
| 20. | திருமதி. அ. சித்ரா | 20வது வார்டு உறுப்பினர் |
| 21. | திருமதி. பீ. அனிதா | 21வது வார்டு உறுப்பினர் |
| 22. | திருமதி. பொ. முத்துலெட்சுமி | 22வது வார்டு உறுப்பினர் |
| 23. | திருமதி. சு. தாமரைசெல்வி | 23வது வார்டு உறுப்பினர் |
| 24. | திருமதி. க. மீகா | 24வது வார்டு உறுப்பினர் |
| 25. | திருமதி. செ. கௌரி | 25வது வார்டு உறுப்பினர் |
| 26. | திருமதி. ஆ. இசக்கியம்மாள் | 26வது வார்டு உறுப்பினர் |
| 27. | திருமதி. அ. ஆயிஷா | 27வது வார்டு உறுப்பினர் |

**நகர்மன்ற கூட்டங்கள்(2024-25)**

அறிக்கையாண்டில் நகர்மன்ற தலைவர் அவர்களால் கீழ்க்கண்டவாறு மன்றக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | சாதாரணக் கூட்டம் | 5 எண்ணம் | 150 பொருட்கள் |
| 2. | அவசரக்கூட்டம் | இல்லை | – |

**குழுக்கள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தில் கீழ்க் குறிப்பிட்ட குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

1. நியமனக்குழு
2. வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு
3. ஒப்பந்தக்குழு

தேர்வு செய்யப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களில் 31.03.2022 அன்று திரு. சூ. சுப்பிரமணியன் என்பவர் நியமனக்குழு உறுப்பினராகவும், திருமதி. செ. கௌரி என்பவர் ஒப்பந்தக்குழு உறுப்பினராகவும் மற்றும் 1. திரு. சி. இராமச்சந்திரன், 2. திரு.ஹ. முகம்மது அலி ஜின்னா, 3. திருமதி. சு. பாலசுகன்யா மற்றும் 4. திருமதி.வெ. சோமசுந்தரி ஆகியோர் வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**நகராட்சி பணியாளர்கள் விபரம்**

| பதவி | அனுமதிக்கபட்ட பணியிடம் | தற்போது பணிபுரியும் பணியாளர்கள் | காலி பணியிடம் |
|---|---|---|---|
| **பொதுப் பிரிவு** | | | |
| மேலாளர் | 1 | 1 | 0 |
| கணக்கர் | 1 | 1 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | உதவியாளர் | 1 | 1 | 0 | |
| | | இளநிலை உதவியாளர் | 5 | 4 | 1 | |
| | | தட்டச்சர் | 1 | 0 | 1 | |
| | | பதிவறை எழுத்தர் | 1 | 1 | 0 | |
| | | அலுவலக உதவியாளர் | 3 | 3 | 0 | |
| | | இரவுக் காவலர் | 0 | 1 | 1 (Excess) | |
| | | தோட்டக்காவலர் | 0 | 1 | 1 (Excess) | |
| | | | | | | |
| | | **பொறியியல் பிரிவு** | | | | |
| | | நகராட்சி பொறியாளர் | 1 | 1 | 0 | |
| | | பொதுப் பணி மேற்பார்வையாளர் | 1 | 1 | 0 | |
| | | பட வரைவாளர் | 1 | 0 | 1 | |
| | | பணி ஆய்வாளர் | 2 | 0 | 2 | |
| | | மின் பணியாளர் | 1 | 0 | 1 | |
| | | குழாய் பொருத்துனர் | 1 | 1 | 0 | |
| | | மோட்டார் இயக்குபவர் | 0 | 2 | 2 (Excess) | |
| | | குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி காவலர் | 0 | 1 | 1 (Excess) | |
| | | | | | | |
| | | **நகரமைப்புப் பிரிவு** | | | | |
| | | நகரமைப்பு ஆய்வாளர் | 1 | 0 | 1 | |
| | | | | | | |
| | | **பொது சுகாதாரப் பிரிவு** | | | | |
| | | சுகாதார ஆய்வாளர் | 1 | 1 | 0 | |
| | | சுகாதார மேற்பார்வையாளர்கள் | 4 | 4 | 0 | |
| | | களப்பணி உதவியாளர் | 1 | 1 | 0 | |
| | | இழுவை ஓட்டுனர் | 0 | 1 | 1 (Excess) | |
| | | தூய்மை பணியாளர்கள் | 0 | 15 | 15 (Excess) | |

| வருவாய்ப் பிரிவு | | | |
|---|---|---|---|
| வருவாய் ஆய்வாளர் | 1 | 1 | 0 |
| வருவாய் உதவியாளர்கள் | 3 | 3 | 0 |

**பேரூந்து நிலையங்கள்**

இந்நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பேரூந்து நிலையம் 1 உள்ளது. இப்பேரூந்து நிலையம் 2003-2004 ஆம் ஆண்டு UIDSSMT திட்டத்தின் மூலம் களக்காட்டின் மையப்பகுதியில் அமைந்துள்ள குடிதாங்கிகுளத்தில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் மூலம் நில உரிமை மாற்றம் செய்து சுமார் 5271 ச.மீல் (56716 சதுர அடி) கட்டப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையத்தில் ஒரு வணிக வளாகம் (44 கடைகள்), பயணிகள் அமரும் இடம் 595 ச.மீ–ல் (6412 சதுர அடி) அமைக்கப்பட்டுள்ளது மற்றும் கட்டண கழிப்பிடம் 10 இருக்கைகள் (ஆண்-5, பெண்-5), குளியலறை (ஆண் - 1, பெண் - 1) மற்றும் ஊனமுற்றோர் கழிப்பறை வசதி (ஆண்-1, பெண்-1) கட்டப்பட்டுள்ளது. மேலும், சின்டெக்ஸ் டேங்க் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. தாய்மார்கள் பாலூட்டும் அறை ஒன்று உள்ளது. பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்தம் 9 எண்ணம் உள்ளது. மேலும், இப்பேருந்து நிலையத்திற்கு அரசு பேருந்துகள், தனியார் பேருந்துகள் என மொத்தம் 50 பேருந்துகள் தினசரி வந்து செல்கின்றன. **(Grade C)**

**நகராட்சி சாலைகள்.**

| | | |
|---|---|---|
| 1. | மண் சாலை | **9.957** கி.மீ |
| 2. | பேவர் பிளாக் சாலைகள் | **11.504** கி.மீ |
| 3. | தார்சாலை | **25.398** கி.மீ |
| 4. | சிமெண்ட் கான்கீரிட் சாலை | **25.689** கி.மீ |
| | மொத்தம் | **72.548** கி.மீ |

**வடிகால்கள்** நீளம் = 25.060 கி.மீ

இந்நகராட்சி பகுதியில் பள்ளமான இடங்கள் உள்ள தெருக்களில் சரள், மண் போட்டு பள்ளத்தை உயர்த்துதல், கல் பதித்து செப்பனிடுதல், தார் மேற்பரப்பு போடுதல் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் இது போன்ற சாலை பராமரிப்பு பணிகள் நடப்பு ஆண்டில் செலவிடப்பட்ட தொகைகள் கீழ்கண்ட விபரப்படி திட்டம் வாரியாக இந்நகராட்சி பகுதிகளில் செவ்வனே செயல்படுத்தப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | | **<u>நடைபெற்று வரும் திட்ட பணிகள்</u>**<br><br>**சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சித்திட்டம் 2024-25**<br><br>இத்திட்டத்தில் 42.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுவருகிறது.<br><br>**பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சித்திட்டம் 2024-25**<br><br>இத்திட்டத்தில் 35.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுவருகிறது.<br><br>**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2024-25**<br>இத்திட்டத்தில் 428.00 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக தினசரி சந்தை அமைக்கும்பணி நடைபெற்றுவருகிறது.<br><br>**நமக்கு நாமேத் திட்டம் 2024-25**<br><br>இத்திட்டத்தில் 45.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுவருகிறது.<br><br>**<u>15வது நிதிக்குழு மான்யத் திட்டம் 2024-25</u>**<br><br>15வது நிதிக்குழு மான்யத் திட்டம் 545.40 லட்சம் மதிப்பீட்டில் 8 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 3 பணிகள் முடிக்கப்பட்டு 5 பணிகள் நடைபெற்று வருகிறது.<br><br>தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 55.50 லட்சம் மதிப்பீட்டில் 2 பணிகள் நடைபெற்றுவருகிறது.<br><br>**<u>வணிக வளாக கட்டிடங்கள்</u>**<br><br>களக்காடு நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் பேருந்து நிலையம் அருகே வணிக வளாகத்தில் 45 கடைகள் உள்ளன. மேலும் இக்கடைகள் குத்தகை மூலம் வாடகைக்கு விடப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் அறிக்கையாண்டில் நகராட்சிக்கு வாடகையாக ரூ. **4.78 /- லட்சம்** வசூல் செய்யப்பட்டது.<br><br>**<u>தெரு மின் விளக்குகள்</u>**<br><br>களக்காடு நகராட்சி மூலம் 2108 தெருமின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. எல்லா தெருக்களுக்கும் மின்விளக்குகள் ஒளிரவிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. விளக்குகளின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு | |

**(2024-25)**

| | | | |
|---|---|---|---|
| 1. | **40 watts** LED விளக்குகள் | - | 231 |
| 2. | **50 watts** LED விளக்குகள் | | 452 |
| 3. | **20 watts** LED விளக்குகள் | | 1403 |
| 4. | **120 watts** LED விளக்குகள் | | 10 |
| 5. | சோடியம் ஆவி விளக்குகள் | - | 12 |
| | மொத்தம் | | 2108 |

அவ்வப்போது தேவையான இடங்களில் புதியதாக மின் விளக்குகள் அமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அனைத்து தெருவிளக்குகளையும் LED மின் விளக்குகளாக மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>பள்ளிகளின் எண்ணிக்கை</u>**

இந்நகராட்சி எல்லைக்குள் கீழ்கண்ட விபரப்படி பள்ளிகள் உள்ளன.

1. நடுநிலைப்பள்ளி - **9**
2. தொடக்கப்பள்ளி - **7**
3. மேல்நிலைப்பள்ளி - **3**
4. தனியார் பள்ளிகள் - 1

**<u>நூலகங்கள்</u>**

நூலக ஆணைக்குழுவினரால் நகரில் பாரதிபுரம் தெருவில் கிளை நூலகம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

சொத்துவரியில் பொதுக் காரியங்களுக்கான வரியில் ஒரு வருடத்திற்கு ஒரு ரூபாய்க்கு **0.10** பைசா வீதம் இவ்வாண்டு ரூ. 9.28/**- லட்சம்** நூலக வரி வசூலிக்கப்பட்டது.

## 16(1) பொது சுகாதாரம்

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நவீன கட்டண கழிப்பிடம் 1 எண்ணம் உள்ளது. இவை அனைத்தும் நகராட்சியின் மூலம் முறையே வருடந்தோறும் குத்தகை மூலம் ஏலம் விடப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இந்நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. **0.70**லட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

நகரில் **2** பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் 8

சமுதாயகழிப்பிடங்கள் உள்ளன. அவைகள் அனைத்தும் செப்டிக் டாங்குகள் உடன் அமைந்துள்ளது. இந்த நவீன கழிப்பிடங்கள் மின்சார வசதியும், தண்ணீர் வசதியும் செய்யப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>வீடுகளில் உள்ள கழிப்பிடங்கள் (2024-25)</u>**

**1.** நகராட்சியின் மொத்த வரிவிதிப்பு எண்ணிக்கை **– 14319**

2. குடியிருப்பு உள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை **– 12154**

**3.** மல அறை வசதியுள்ள வீடுகளின் எண்ணிக்கை **– 11704**

மேற்கூறிய குடியிருப்புக்கான வீடுகளின் மொத்த எண்ணிக்கையில் மல அறை வசதியுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை **94 %** ஆகும்.

இந்நகரில் குடியிருப்பு வீடுகள் என்று சொல்லப்படுகிறவைகளில் பழைய வீடுகள் அதிகம். அவைகள் பெரும்பான்மையான வீடுகள் தனியான வீடுகள் அடங்கியவையாகும். இந்த தனிப்பட்ட வீடுகளில் மொத்தம் **12105** செப்டிக் டாங்க் உள்ளன. தெருக்கள் காலையிலும், மாலையிலும் சுத்தம் செய்யப்படுகின்றன.

**திடக்கழிவு மேலாண்மை பணிகள்**

களக்காடு நகராட்சி பகுதியில் நாள் தோறும் 10.74 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரமாகிறது. இந்நகராட்சி மூலம் இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் ஆகியவைகளில் உள்ள குப்பைகளை நாள் தோறும் Door to Door Collection செய்யப்பட்டு வருகிறது.

களக்காடு நகராட்சி பகுதியில் நாடார் வடக்கு புதுத்தெரு–சிதம்பராபுரம் மெயின் ரோட்டில் உள்ள 3 டன் கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் செயலாக்க மையம் தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2022-2023ன் கீழ் அமைக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

நகர்ப்புறங்களில் சேகரம் செய்யப்படும் குப்பைகள் இந்நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வளமீட்பு பூங்காவிற்கு கொண்டு சென்று, 7.20 டன் மக்கும் குப்பைகள் கையாளப்பட்டு, உரம் தயார் செய்து களக்காடு நகராட்சி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு **இலவசமாக** கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் களக்காடு நகராட்சி உரக்கிடங்கில் வளம் மீட்பு

பூங்கா அமைக்கப்பட்டு மறுசுழற்ச்சி செய்ய **இயலாத** பிளாஸ்டிக் கழிவுகளை பைண்டிங் இயந்திரம் மூலம் பேக்கிங் செய்யப்பட்டு **நகராட்சி** மூலம் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டுவருகிறது. நடப்பு ஆண்டில் 38 டன் மறுசுழற்ச்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

**<u>பிறப்பு மற்றும் இறப்பு</u>**

அறிக்கை ஆண்டில் கீழ்க்குறிப்பிட்ட விபரப்படி பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

1. பிறப்பு **– 854** எண்ணம்
2. இறப்பு **– 241** எண்ணம்
3. இறந்து பிறந்தவை **– 2** எண்ணம்

**<u>திருவிழாக்கள்</u>**

இந்நகராட்சி பகுதியில் உள்ள கோமதி அம்மன் சத்திய வாகீஸ்வரர் திருக்கோவில் தேர்த்திருவிழா மற்றும் சௌந்திர பாண்டீஸ்வரர் திருக்கோவில் திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

இந்த திருவிழா காலங்களில் சுகாதார ஏற்பாடுகள் கூடுதல் விளக்கு**கள்** மற்றும் குடிநீர் வசதிகள் அனைத்தும் களக்காடு நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>குடிநீர் விநியோகம்</u>**

களக்காடு நகராட்சி சொந்த குடிநீர் திட்டம் (வடக்கு பச்சையாறு) மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் (பணகுடி–வடக்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் நான்குனேரி–திசையன்விளை கூட்டு குடிநீர் திட்டம்) மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனுடைய நீரேற்று நிலையங்கள் கீழக்கருவேலன்குளம் மற்றும் வடகரை பகுதியில் அமைந்துள்ளது. இதன் மூலம் களக்காடு நகருக்கு தினசரி 18.00 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நகராட்சியின் 2011ம் வருட கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 30921 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 34632 ஆகும். தற்போதைய மக்கள் தொகையின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இந்நகரத்தில்

35.00 கிலோ மீட்டர் நீளத்தில் குடிநீர் விநியோக குழாய்கள் பொருத்தப்பட்டு பிரதான பகுதிகளுக்கும், விரிவாக்க பகுதிகளுக்கும், குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நகராட்சி பகுதியில் 3727 வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகளும், 27 வணிக உபயோக குடிநீர் இணைப்புகளும் மொத்தம் 3754 குடிநீர் இணைப்புகள் உள்ளது. மேலும் 100 கைப்பம்புகளும், 345 பொது குடிநீர் குழாய்களும் மற்றும் 22 சிறுமின் விசைப் பம்புகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு சீரானமுறையில் நாள் ஒன்றுக்கு 135 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**நீர்த்தேக்கத்தொட்டிகளின் விபரம்**

| **அமைந்துள்ள இடம்** | : | **கொள்ளளவு** |
|---|---|---|
| கோவில்பத்து | : | 1,50,000 (லிட்டர்), 2,00,000 (லிட்டர்) |
| களக்காடு (ஆற்றங்கரை) | : | 1,00,000 (லிட்டர்) |
| கீழப்பத்தை | : | 30,000 (லிட்டர்) |
| சிங்கம்பத்து | : | 30,000 (லிட்டர்) |
| சிதம்பராபுரம் | : | 1,00,000(லிட்டர்) |
| கருவேலன்குளம் | : | 30,000 (லிட்டர்) |
| மஞ்சுவிளை | : | 1,00,000 (லிட்டர்) |
| மேலபத்தை | : | 15,000 (லிட்டர்) |
| மூங்கிலடி | : | 60,000(லிட்டர்) |
| கக்கன்நகர் | : | 2,00,000 (லிட்டர்) |
| அம்பேத்கார் நகர் | : | 10,000 (லிட்டர்), 60,000 (லிட்டர்) |
| வடமலைசமுத்திரம் | : | 10,000 (லிட்டர்), 30,000 (லிட்டர்) |

**வீட்டு இணைப்பு கட்டண விவரம்**

வீட்டு உபயோகத்திற்கு ரூ.110/- வீதமும், வணிக உபயோகத்திற்கு ரூ.220/- வீதமும் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. மேலும் புதிய குடிநீர் இணைப்பு வழங்க கீழ்க்கண்டவாறு வைப்புத் தொகைகள் மற்றும் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

வீட்டு உபயோகத்திற்கு வைப்புத் தொகை
ரூ. 5000/-
வணிக பயன்பாட்டிற்கு வைப்புத் தொகை

ரூ. 10000/-
**தொழிற்சாலை இணைப்புகளுக்கு ரூ.**12000/-

**சொத்து வரிவசூல்**

2024-25ம் ஆண்டில், 14154 சொத்துவரி விதிப்பு விதிப்புகளின் நிலுவை கேட்பு ரூ.0.19 இலட்சம் மற்றும் நடப்பு கேட்பு ரூ. 94.32 இலட்சம் சேர்த்து மொத்த கேட்பு ரூ. 94.51 இலட்சத்தில் ரூ. 92.28 இலட்சம் 97.64 சதவிகிதம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**தொழில் வரி**

தமிழ்நாடு மாவட்ட புதிய தொழில் வரிச்சட்டத்தின் பிரகாரம் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தனியாக தொழீல் நடத்துபவர்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் ரூ.14.56 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**குடிநீர் கட்டணம்**

2024-25ம் ஆண்டில், 3754 எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகளில் நிலுவை கேட்பு **இல்லை** மற்றும் நடப்பு கேட்பு ரூ.48.80 இலட்சம் சேர்த்து மொத்த கேட்பு ரூ.48.80 இலட்சத்தில் ரூ.46.59 இலட்சம் 95.48 சதவிகிதம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சியின் வரவு செலவு விபரம்**

**Abstract Of Income Account For The Year 2024-25**

| Code No | Description of items | Actual Previous Year Amount 2023-24 | Current Year Amount 2024-25 |
|---|---|---|---|
| 110 | Tax Revenue | 7904418.58 | 18253292.91 |
| 120 | Assigned Revenues & Compensations | 567455 | 838411 |
| 130 | Rental Income from Municipal Properties | 3096572 | 142400 |
| 140 | Fees & User Charges | 8187696 | 11839130 |
| 160 | Revenue Grants, Contribution and Subsidies | 107014425 | 69080856 |
| 170 | | 251373 | |
| 171 | Interest Earned | 902826.5 | 523663 |
| 180 | Other Income | 6262024 | 2330937 |
| | Total | 134186790.1 | 103008689.9 |

**Abstract Of Expenditure Account For The Year 2024-25**

| Code No | Description of items | Actual Previous Year Amount 2023-24 | Cu-rrent Year Amount 2024-25 |
|---|---|---|---|
| 210 | Establishment Expenses | 50811786.11 | 61784112 |
| 220 | Administrative Expenses | 6922237.66 | 9477019.1 |
| 230 | Operations & Maintenance | 19709611 | 9172955 |
| 240 | Interest & Finance Charges | 1374821.35 | 474162 |
| 250 | Programme Expenses | 441171 | 127260 |
| 260 | Grants, Contribution and Subsidies | 7672950 | 120000 |
| 272 | Depreciation | 140713271 | |
| 280 | Prior Period Item | | -748492 |
| | Total | **226814255.2** | **80407016.1** |
| 3109002-Gross Deficit of Expenditure over Income | | **92627465.14** | **22601673.81** |

**<u>அரசுக்கடன்கள்</u>**

இந்நகராட்சியில் சிறப்பு சாலை திட்டம் 2024-25ன் கீழ் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.243.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.175.00 இலட்சம் டுபிட்கோ நிறுவனத்தின் கடனாக பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகைக்கான வட்டி மற்றும் அசல் தொகை மான்ய நிதியின் கீழ் பிடித்தம் செய்யப்பட்டுவிட்டது. **கடன்தொகை ஏதும் இல்லை.**

**<u>தணிக்கை</u>**

**2024-25** ஆண்டின் ஆரம்பத்தில் **169** தணிக்கைத் தடைகள் நிலுவையில் இருந்தன. அறிக்கையாண்டு இறுதியில் நிலுவையாயிருந்த தணிக்கைத்தடைகள் கூட்டமர்வின் போது நிவர்த்தி செய்யப்படும்.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

ந.க.எண். 184/2023/சி1

| | | | |
|---|---|---|---|
| 30.05.2025 | 613 | **<u>மன்றப்பொருள்: 11</u>**<br>களக்காடு நகர்மன்றத்திற்கு தேந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களுக்கு அவர்தம் கடமை பொறுப்புகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் சம்பந்தமான பயிற்சி தமிழ்நாடு நகரியியல் பயிற்சி மையத்தின் சார்பாக 06.05.2025 மற்றும் 07.05.2025ல் மதுரையில் நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொள்ள இந்நகர்மன்ற அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 8 நகர்மன்ற உறுப்பினர்கள் மட்டும் மேற்படி பயிற்சியில் கலந்து கொண்டுள்ளனர் அவர்கள் மேற்படி பயிற்சியில் கலந்து கொண்டமைக்கான பயணப்படி கோரப்பட்டுள்ளது. எனவே அவர்களுக்கு விதிமுறைகளின்படி பயணப்படி அனுமதிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் அரசு ஊழியர் தொகுப்பில் உள்ள "B"பிரிவு அலுவலர்களுக்கான பயணப்படி அனுமதிக்கலாம். | அரசு விதியினை பின்பற்றி பயணப்படி கொடுக்க அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 30.05.2025 | 614 | **<u>மன்றப்பொருள்: 12</u>**<br>களக்ககாடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06 வடலைசமுத்திரத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் பிராதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் அப்பகுதியில் உள்ள நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான பழைய பாலத்தினை இடித்து புதிதாக கட்டும் பணியின்போது சேதமடைந்துள்ளது. அதுபோன்று வார்டு எண்.10 சிவசண்முகபுரம் தெற்கு தெருவில் தடுப்பு சுவர் கட்டும் பணியின்போதும் அப்பகுதியில் பகிர்மான குழாய் உடைந்துள்ளது. எனவே இவ்விரு இடங்களிலும் உள்ள குடிநீர் குழாய்களை சீரமைக்க ரூ. 2.25 லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது, இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம், இப்பணியினை குடிநீர் விநியோக பணி அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ளவும், செலவினத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதியின்படி செலவிட அனுமதி அளிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td>30.05.2025</td>
<td>615</td>
<td>
<u>மன்றப்பொருள்: 13</u>
களக்காடு நகராட்சி பகுதிகளில் வரப்போகும் வடகிழக்கு பருவமழை காலங்களில் வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதிகளில் பொது சுகாதார அவசர அவசிய பணிகளான கொசு ஒழிப்பதற்கும், டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கும் வீடுகள் தோறும் புகைபரப்பும் இயந்திரங்கள் (Indoor Fogging Machine) மற்றும் வெளிப்பகுதிகளில் புகைபரப்பும் இயந்திரங்கள் (Out Door Fogging Machine) வாங்குவதற்கு தோராயமான விலை ரூ.306200/- ஆகும். மேற்படி இயந்திரங்களை வாங்குவதற்கும், மேலும் உத்தேச செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>விபரம்</th><th>எண்ணிக்கை</th><th>ஒன்றின் விலை ரூ.</th><th>தோராயமான விலை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>வீடுகளுக்குள் புகைபரப்பும் இயந்திரங்கள் (Indoor Fogging Machine)</td><td>3</td><td>26900</td><td>80700</td></tr>
<tr><td>2.</td><td>எரிவாயு கொள்கலன் (Gas Cylinder)</td><td>100</td><td>355</td><td>35500</td></tr>
<tr><td>3.</td><td>வெளிப்பகுதிகளில் புகைபரப்பும் இயந்திரங்கள் (Out Door Fogging Machine)</td><td>2</td><td>95000</td><td>190000</td></tr>
<tr><td></td><td colspan="3">மொத்தம்</td><td>306200</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u>
மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
</td>
<td>சட்ட விதிப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.05.2025</td>
<td>616</td>
<td>
<u>மன்றப்பொருள்: 14</u>
களக்காடு நகராட்சி பகுதிகளில் எதிர்வரும் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது சுகாதார அவசர அவசிய பணியான கால்வாய்களில் அடைப்புகளை நீக்கும் பணிக்கு நகர்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 2023 (திருத்தம்) பிரிவு 57 (7)ன் கீழ் மேற்கொள்ள வேண்டியுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கும். மேலும் செலவினத்தை நகராட்சியின் வருவாய்
</td>
<td>சட்டவிதிகளின்படி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | |
| 30.05.2025 | 617 | **<u>மன்றப்பொருள்: 15</u>**<br>களக்காடு நகராட்சியில் பொது சுகாதார பணியாளர்கள், மற்றும் அலுவலக உதவியாளர்கள், ஆகியோருக்கு 2024–2025ஆம் நிதியாண்டிற்கு சீருடை வழங்குவதற்கும் மற்றும் அதற்குரிய தையற்கூலி, சீருடை வாங்கம் செலவு தொகையினை வழங்க மன்ற அனுமதிக்காக.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 90/2022/எச்1 | சட்டவிதிகளின்படி செலவினம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 30.05.2025 | 618 | **<u>மன்றப்பொருள்: 16</u>**<br>களக்காடு நகராட்சி, களக்காடு பகுதி –I, சர்வே எண். 797/1, 798/1, 799/1A1A, 799/1A1B, 799/1A2, 799/1A3, 799/1A4 ஆகியவை மொத்தம் 4.53 ஏக்கர் நிலத்தினை நகர ஊரமைப்பு துறை இணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித எண். 733–K90XC/2024/TCB, நாள். 14.07.2024–ன்படி 91 மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் 91 மனைப்பிரிவிற்கு உரிய வளர்ச்சி கட்டணம், உள்கட்டமைப்பு கட்டணம் ஆகியவை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் நகராட்சி கட்டணங்கள் முறையாக உரிய தலைப்பில் இணைய வழியாக செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மனைப்பிரிவு திட்ட அனுமதி வழங்கலாம். மேற்கண்ட கடித எண்ணின் மூலம், களக்காடு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1301/2024–ன்படி இந்நகராட்சிக்கு நன்கொடை பத்திரம் மூலமாக தபசில் 1ல் சாலை எண். 1 முதல் 14 வரையுள்ள 837.13 மீட்டர் நீளமுள்ள சாலைகளும், தபசில் 2ல் 2781.31 சதுர மீட்டர் கொண்ட பூங்கா மனை எண். 1, 2, 3–ம், தபசில் – 3ல் நகராட்சி ஒதுக்கீடு, பொது பயன்பாட்டுக்கு 270 சதுர மீட்டர் என வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள். 09.12.2020–ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கை ந.க.எண். | அலுவலக குறிப்பின்படி சட்டவிதிகளுக்கு உட்பட்டு செயல்பட அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>12843/2022/டிபி–2, நாள். 20.10.2022–ன்படியும், மனைப்பிரிவில் கண்டுள்ள 837.13 மீட்டர் சாலைகள், 2781.31 சதுர மீட்டர் பூங்காக்கள் போன்ற திறந்தவெளி ஒதுக்கீடு இடங்களை ஏற்கனவே தான பத்திரமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை நகராட்சி சொத்தாக ஏற்கவும், நகராட்சி பராமரிப்பில் கொண்டு வர மன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.05.2025</td>
<td>619</td>
<td><u>மன்றப்பொருள்: 17</u><br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனங்களுக்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்க பணிகள் உரிய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்து. அதன் வகைக்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பட்டியல்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஈப்பு வாகன எண்.</th><th>நிறுவனத்தின் பட்டியல் நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>TN72 CV 2767</td><td>டெரிக்மோட்டார்ஸ் (பி) லிமிடெட், திருநெல்வேலி Invoice Date 22.05.2025</td><td>25744</td></tr>
<tr><td>2.</td><td>TN72 CV 2718</td><td>டெரிக்மோட்டார்ஸ் (பி) லிமிடெட், திருநெல்வேலி Invoice Date 10.05.2025</td><td>8374</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம் ரூ.</td><td>34118</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு :</u><br>அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வாகனங்களை பராமரிப்பு/பழுது நீக்க பணிகளை மேற்கொண்டதையும், செலவு தொகை வழங்கப்பட்டதையும் மன்றம் பின்னேற்பு செய்யலாம்.</td>
<td>அரசு விதிகளுக்குட்பட்டு செலவிட அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 30.05.2025 | 620 | **<u>மன்றப்பொருள்: 18</u>**<br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான வியாசராசபுரத்தில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தொழில் நுட்ப கணினி ஆய்வகங்கள் அரசால் அமைக்கப்படவுள்ளதால் அதன் பொருட்டு எற்கனவே உள்ள மின் இணைப்பினை முன்முனை மின் இணைப்பாக மாற்றவும் அதற்கான செலவின தொகையினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் நிதியிலிருந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.35/மா.ஒ.2/ஒபக/2025 நாள். 13.05.2025ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் அப்பள்ளியின் மின் இணைப்பினை மும்முனை மின் இணைப்பாக மாற்றியமைக்க தமிழ்நாடு மின் வாரிய கேட்புபடி தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அலுவலக குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது. |
| 30.05.2025 | 621 | **<u>மன்றப்பொருள்: 19</u>**<br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடைகள், களக்காடு பேரூராட்சியாக செயல்பட்டு இருந்த போது ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு களக்காடு பேரூராட்சி மன்ற தீர்மான எண். 21, நாள். 20.03.2008ல் பேருந்து நிலையத்தில் அமைந்திருந்த 32 கடைகளுக்கு 2008-09 ம் நிதியாண்டில் பொது ஏலம் கோரப்பட்டு அதில் 27 நபர்களுக்கு ஊர்ஜிதம் செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள 5 கடைகளுக்கு களக்காடு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 8, நாள். 30.09.2009ன்படி 5 நபர்களுக்கு 2009-10 ம் நிதியாண்டில் ஒப்படைப்பு செய்யப்பட்டது.<br><br>இந்நிலையில் களக்காடு நகர் மன்ற தீர்மான எண்.411, நாள்.29.12.2023–ன்படி களக்காடு பேருந்து நிலையத்தில் உள்ள 32 கடைகளின் குத்தகை உரிம காலம் 01.04.2023 முதல் 31.03.2026 வரை புதுப்பிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன்படி கடைகளின் மாத வாடகை தொகையினை. மேலும் 15% வாடகை உயர்வு செய்து, வாடகை தொகை நிர்ணயம் செய்து குத்தகை உரிம காலம் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. | அலுவலக குறிப்பின்படி, நகராட்சியின் நிதிநிலையினை கருத்திற்கொண்டு நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையக் கடைகளை ஏலம் விடுவதற்கும், முந்தைய ஏலதாரர்கள் தொடர்ந்து கடை நடத்த விருப்பம் உள்ளவர்களுக்கு உரிய அரசு ஏல விதிமுறைகளை பின்பற்றி முன்னுரிமை வழங்கிடவும் தீர்மானிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
களக்காடு நகராட்சி பேருந்து நிலைய மறு சீரமைப்பு பணிகள் மூலதன நிதி இயக்குதல் மற்றும் பேணுதல் 2023-24 பகுதி –II –ன் கீழ் புதுப்பித்தல் வேலை உத்தரவு வழங்கப்பட்டதின்படி, மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதன் தொடர்ச்சியாக களக்காடு நகராட்சி புதிய பேருந்து நிலைய குத்தகைதாரர்களுக்கு வழங்கப்பட்ட இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். அ1/272/2024, நாள். 29.04.2024–ன்படி, கடந்த 30.06.2024 அன்று அவரவர்களுக்கு பாத்தியப்பட்ட கடைகளை காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளனர்.
தற்போது களக்காடு நகராட்சி பேருந்து நிலைய கடைகள் அனைத்தும் பராமரிப்பு பணிகள் முடிவு பெறும் நிலையில் உள்ளதால் மேற்கண்ட கடைகளுக்கு முன் பொது ஏலம் / முன் ஒப்பந்தபுள்ளி கோரி குத்தகைதாரர்களுக்கு கடைகளை ஒப்படைப்பு செய்ய, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 66, நாள். 06.08.2024ல் தெரிவித்துள்ள விதிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசர அவசியமாகிறது. மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் கீழ்கண்டுள்ளவாறு.
<table>
<tr><td>I)</td><td>நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், வணிக வளாகங்கள் மற்றும் சந்தைகள் ஆகிய பொது வணிகப் பயன்பாட்டு சொத்துக்கள் அமைந்துள்ள இடங்களில் மேற்கொள்ளப்படும் பொது சுகாதாரப் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகளை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் குத்தகை / உரிமதாரர்களின் பங்களிப்புடன் உரிய வழிகாட்டுதல்களை பின்பற்றி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்தலாம்.</td></tr>
<tr><td>II)</td><td>அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் குத்தகை / உரிமதாரர்களிடம் செய்து கொள்ளும் வாடகை ஒப்பந்த பத்திரங்களை உரிமதாரர்களின் செலவில் இணைய வழியில் (Online) முறையாக The Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Landlords and Tenancy Act, 2017 (தமிழ்நாடு சட்டம் 42/2017) (TNRRRLT Act)-ன் கீழ் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மேற்கொள்வது போன்று எளிய முறையில் பதிவு செய்யும் நடைமுறையை செயல்படுத்தலாம். மேலும் 2024-25 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு தொடரும் குத்தகை இனங்களின் குத்தகை / உரிமதாரர்களின் வாடகை ஒப்பந்த பத்திரங்களையும் விடுதலின்றி பதிவு செய்யலாம்.</td></tr>
</table>
</td>
<td></td>
<td></td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | III) | பொதுப்பணித்துறை விலை விகிதப்படி வாடகை நிர்ணயம் செய்யும் பொழுது கட்டிடத்தின் தளத்தினை அடிப்படையாகக் கொண்டு தரை தளத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பிலிருந்து 10% முதல் தளத்திற்கும், இரண்டாவது தளத்திற்கு 15% மற்றும் 3-வது தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்களுக்கு 25% என ஒவ்வொரு தளத்திற்கும் ஏற்ற முறையில் உரிய விகிதாசார அடிப்படையில் வாடகை மதிப்பினை குறைத்து நிர்ணயித்து ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை மேற்கொள்ளலாம். | | |
| | | | IV) | கட்டிடத்தின் அமைவிடத்தினை பொறுத்து, அதாவது முகப்பு பகுதியை தவிர மையப்பகுதி, நேரடியாக அணுக முடியாத கடைசியில் உள்ள பகுதி மற்றும் பொதுக் கழிப்பறைக்கு அருகில் உள்ள இனங்களுக்கு பொதுப்பணித்துறை விலை விகிதப்படி நிர்ணயிக்கப்பட்ட வாடகை மதிப்பு தொகையிலிருந்து 10% முதல் 20% வரை குறைவு செய்து மதிப்பு நிர்ணயம் செய்யலாம். | | |
| | | | V) | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச குத்தகை / உரிமத் தொகையை விட 100 சதவிகிதத்திற்கும் கூடுதலாக குத்தகை / உரிம இனங்களுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில், 151% முதல் 250% வரை கோரும் நிலையில் வைப்புத் தொகையை 2 மடங்காகவும், 250% முதல் 350% வரை கோரும் நிலையில் 3 மடங்காகவும், ஒவ்வொரு கூடுதல் 100 சதவிகிதத்திற்கும் ஒரு மடங்கு வைப்புத் தொகை உயர்த்தி கூடுதல் வைப்புத் தொகை நிர்ணயம் செய்யலாம். அனைத்து குத்தகை இனங்களுக்கும் பெறப்படும் வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ஆகியவற்றிற்கு 50 சதவிகிதத்திற்கும் மிகாமல் உள்ள தொகைக்கு சொத்து மதிப்பு சான்றிதழ் (Property Solvency Certificate) பெறுவதற்கு பதில், வங்கி உத்திரவாதச் சான்றிதழ் (Bank Guarantee Certificate) பெறலாம். | | |
| | | | VI) | குத்தகை இனங்களில் குத்தகைக் காலம் முடிய உள்ள ஆண்டின் கடைசி ஆறு மாத காலத்திற்குள் அதாவது 3 ஆண்டு உரிம இனங்களுக்கு 2½ ஆண்டிலும், 6 ஆண்டு குத்தகை இனங்களுக்கு 5½ ஆண்டிலும், 9 ஆண்டு குத்தகை இனங்களக்கு 8½ ஆண்டிலும் வாடகை மறு நிர்ணயக்குழு குத்தகைதாரர்களோடு ஆலோசனை நடத்தி மறு நிர்ணயம் செய்யப்படும் தொகையினை, ஏற்கனவே அனுபோகத்தில் உள்ள குத்தகைதாரர் / உரிமதாரர் ஏற்றுக் கொள்ளும் நிலையில் உரிமத்தினை புதுப்பித்து உத்தரவு வழங்க வேண்டும். சம்மத கடிதம் வழங்கப்படாத நிலையில் இவ்வினங்களுக்கு புது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை 6 மாத காலத்திற்குள் முடிக்கும் வகையில் மேற்கொண்டு உரிய காலத்தில் உரிமம் / குத்தகை ஒப்படைக்க வேண்டும். | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | VII) | தொடர்ந்து பலமுறை ஏலம் நடத்தியும் (குறைந்தது 4 முறைக்கு மேல் மின்னணு - ஏலம் (E-Auction) நடத்தப்பட்டிக்க வேண்டும்) யாரும் நிர்ணயம் செய்த தொகைக்கு ஏலம் கோரப்படாத குத்தகை / உரிம இனங்களில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு ஏலம் கோரப்பட்ட தொகையிலிருந்து 10% தொகை குறைத்து மறு ஏலம் கோரலாம். அதற்கு மேல் குறைக்கப்பட வேண்டிய சூழல் உள்ள நிலையில் உரிய காரணங்களை தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம். | | |
| | | | VIII) | ஒன்பது ஆண்டு குத்தகை இனங்களில் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15% உயர்வு செய்வதற்கு பதிலாக ஒவ்வொரு ஆண்டும் சீராக 5% என உயர்வு செய்து குத்தகை தொகையினை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். | | |
| | | | IX) | புதிய வணிகப் பயன்பாட்டுக் கட்டிடங்கள் மற்றும் குத்தகை காலம் முடிவுற்ற பின்னர் வாடகை மறுநிர்ணயம் செய்யும் இனங்களுக்கு பொதுப்பணித்துறை விலை விகிதம் மற்றும் அங்காடி மதிப்பு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யும் பொழுது பொதுப்பணித்துறை மதிப்பானது அங்காடி மதிப்பை (Market rate) விட 25 சதவிகிதத்திற்கும் கூடுதலாக உள்ள நிலையில், அங்காடி மதிப்பினையும், 25 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ள நிலையில் இவற்றில் எது அதிகமோ அதனையும் நிர்ணயம் செய்து ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை மேற்கொள்ளலாம். | | |
| | | | X) | பயன்பாட்டிலுள்ள மாநகராட்சி / நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்களை இடித்து புதிதாக கட்டிடங்கள் கட்டி ஏற்கனவே உள்ள குத்தகைதாரர் / உரிமதாரர்களுக்கு ஒப்படைக்கும் நிலையில், அவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) செய்து அதே வளாகத்தில் உள்ள கடைகளை பொது ஏலத்தில் ஒப்படைப்பு செய்யும் இனங்களின் மொத்த கடைகளின் சராசரி வாடகை மதிப்பினை (Average Value of open tender) வாடகையாக நிர்ணயம் செய்து குலுக்கல் முறையில் வெளிப்படைத்தன்மையுடன் ஒப்படைப்பு செய்யலாம். இவ்வாறு ஒப்படைப்பு செய்யும் நிலையில் ஏற்கனவே அனுபோகத்தில் உள்ள குத்தகைதாரருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நிலையில் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம். | | |
| | | | | (i) இருமுறையாவது ஏலம் புதுப்பிக்கப்பட்டு ஆண்டுகளுக்கு மேலாக அனுபோகத்தில் உள்ள குத்தகைதாரர் / உரிமதாரர் அல்லது குத்தகைதாரர் / உரிமதாரர்களின் வாரிசுதாரர். | | |
| | | | | (ii) உள் வாடகை / ஆக்கிரமிப்புதாரர் அல்லாதவர். | | |
| | | | | (iii) பிற வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக கடைகள் இடமாற்றம் செய்யப்படும் நிலையில் குத்தகைதாரர்களுக்கும் மேற்கூறிய தகுதியின் அடிப்படையில் கடைகள் / சொத்துக்கள் ஒப்படைக்கலாம். | | |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>(iv) இணைந்து தொழில் நடத்தும் (Joint venture) குத்தகைதாரர்கள் (ஏல பதிவேட்டின்படி அவர்கள் பெயர் பதிவு செய்திருக்கும் நிலையில் மட்டும்)</td></tr>
<tr><td>XI)</td><td>தற்போது 9 ஆண்டுகள் நிறைவடைந்து வாடகை மறுநிர்ணயம் செய்துள்ள கடைகளில் 5 மடங்கிற்கு மேல், வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ள இனங்களில் பெருமளவு தொகை செலுத்தப்படாமல் வழக்குகள் தொடரப்பட்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதால், இவற்றிற்கு மாநகராட்சிகள் / நகராட்சிகளில் இனங்கள் வாரியாக கண்டறிந்து தீர்வு காணும் வகையில் மண்டல / மாநகர அளவில் குழு அமைக்கலாம்.</td></tr>
</table>
களக்காடு நகராட்சி பேருந்து நிலைய கடைகளின் குத்தகைதாரர்களுக்கு இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். அ1/1719/2024, நாள்.30.04.2025ன்படி 06.05.2025 அன்று காலை 10.30 மணியளவில் நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. பேருந்து நிலைய கடைகளுக்கு ஏலம் நடத்தப்படவேண்டும்.
எனவே, களக்காடு புதிய பேருந்து நிலையத்தில் உள்ள 32 கடைகளில் பராமரிப்பு பணிகள் முடிவடைந்த நிலையில் உள்ளதால், நகராட்சி வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் நகராட்சி சொந்த வருவாயினை பெருக்கும் பொருட்டும் வரியில்லா இனமான அனைத்து பேருந்து நிலைய கடைகளையும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 66, நாள். 06.08.2024 ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி பொது ஏலம் / மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளி கோர பரிசீலனைக்கும் மன்றத்தின் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு:</u>
களக்காடு நகராட்சியின் பொது நிதி குறைவாக உள்ளது. மேலும் பேருந்து நிலைய விரிவாக்க பணிகள் / சந்தை மேம்பாடு / கசடு கழிவு திட்ட பணிகள் போன்ற பல்வேறு திட்ட பணிகளுக்கு பொதுநிதியிலிருந்து பங்களிப்பு தொகை வழங்க வேண்டியுள்ளதால், சொந்த வருவாயான வரியில்லா இனத்தின் முக்கிய அங்கமான வணிக வளாக குத்தகை உரிமத்தினை பொது ஏலம் மற்றும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தபுள்ளி கோரி சொந்த
</td>
<td></td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>வருவாய் ஈட்ட வேண்டியுள்ளது அவசியமாகிறது. (ந.க.எண் 1719/2024/அ1)
<table>
<tr><th>வ எண்</th><th>குத்தகை இனத்தின் பெயர்</th><th>முன் வைப்புத் தொகை (ரூ.)</th><th>கூடுதல் முன் வைப்புத் தொகை</th></tr>
<tr><td>1</td><td>களக்காடு நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் 1 முதல் 32 முடிய</td><td>ரூ.1,00,000/- (கடை ஒன்றுக்கு)</td><td>12 மாத கடை வாடகை +18% GST</td></tr>
</table>
மேலும், பொது ஏல அறிவிப்பினை விதிமுறைகளின்படி நாளிதழில் வெளியிடுவதற்குண்டான விளம்பர கட்டணம் வழங்கவும் மன்ற அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.05.2025</td>
<td>622</td>
<td><u>மன்றப்பொருள்: 20</u><br>
மாண்புமிகு. தமிழக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டம், களக்காடு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கீழ்கண்ட 3 அரசு பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 77 மாணவ மாணவியர்களுக்கு அரசு வழிகாட்டுதலில் தெரிவித்துள்ளபடி மகளிர் திட்டத்தில் பதிவு பெற்ற சுய உதவிக்குழு செந்தளிர் ஏரியா லெவல் ஃபெடரேஷன் மூலம் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வகை</th><th>பள்ளியின் பெயர்</th><th>மாணவர்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td rowspan="3">அரசுப் பள்ளிகள்</td><td>நகராட்சி தொடக்கப்பள்ளி, கீழக்கருவேலன்குளம்.</td><td>25</td></tr>
<tr><td>2.</td><td>அரசு ஆதிதிராவிடர் நலத் தொடக்கப்பள்ளி, சிவசண்முகபுரம்.</td><td>19</td></tr>
<tr><td>3.</td><td>நகராட்சி நடுநிலைப்பள்ளி, களக்காடு.</td><td>39</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>83</td></tr>
</table>
மேலும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் 2025–2026 வரவு செலவு திட்ட உரையில் அறிவிப்பு நாள். 14.03.2025ன்படியும், மாநில கல்வி இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளி கல்வி வளாகம் அவர்களின் கடித எண். 0889/C1/EMIS/2025, நாள். 17.03.2025ன்படியும் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.ந8/2021594/2024, நாள்.</td>
<td>சட்ட விதிமுறைகளை பின்பற்றி செலவிட அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

07.04.2025ன்படியும், 2025-2026ம் ஆண்டு நகர்புற பகுதிகளில் அமைந்துள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப்பள்ளி மாணவ/மாணவியர்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் கீழ்கண்ட 11 அரசு உதவி பெறும் பள்ளிகள் அமைந்துள்ளது.

| வ. எண். | வகை | பள்ளியின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அரசு உதவி பெறும் பள்ளிகள் | நீலகண்டா இந்து துவக்கப்பள்ளி, பத்தை. | 25 |
| 2. | | T.D.T.A. நடுநிலைப்பள்ளி, மஞ்சுவிளை. | 63 |
| 3. | | சி.எம்.எஸ். இவாஞ்சலிக்கல் நடுநிலைப்பள்ளி, மேலப்பத்தை. | 23 |
| 4. | | T.D.T.A. துவக்கப் பள்ளி, கீழக்கருவேலன்குளம். | 23 |
| 5. | | T.D.T.A. துவக்கப் பள்ளி, களக்காடு. | 29 |
| 6. | | சி.எம்.எஸ். இவாஞ்சலிக்கல் தொடக்கப்பள்ளி, மூங்கிலடி. | 58 |
| 7. | | கே.ஏ.எம்.பி. மீரானியா நடுநிலைப்பள்ளி, களக்காடு. | 442 |
| 8. | | சவேரியார் நடுநிலைப்பள்ளி, சேவியர்புரம் (பாண்டியாபுரம்). | 127 |
| 9. | | T.D.T.A. துவக்கப்பள்ளி, சிதம்பராபுரம். | 83 |
| 10. | | முத்தையா இந்து நடுநிலைப்பள்ளி, கோவில்பத்து. | 87 |
| 11. | | இந்து நடுநிலைப் பள்ளி, பண்டிதன்குறிச்சி. | 134 |
| | மொத்தம் | | 1094 |

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மாண்புமிகு.முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் 26.05.2025 அன்று நடத்தப்பட்டது. மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் காலை உணவுத் திட்டத்தினை ஜுன் மாதம் முதல் துவங்குவதற்காக அந்தந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்களுடன் கலந்தாலோசித்து மேற்கண்ட பள்ளிகளில் காலை உணவுத்

| | | | |
|---|---|---|---|
| | | திட்டத்தினை நல்ல முறையில் மாணவர்களுக்கு வழங்க ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், இது சம்பந்தமாக சமையலறை கட்டிடத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், மேற்கண்ட 11 பள்ளிகளில் பயிலும் 1094 மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு தயாரிப்பதற்கான சமையல் பாத்திரங்கள் மற்றும் உணவு வழங்குவதற்கான தட்டுகள் தயார் நிலையில் வைத்திருக்க தெரிவிக்கப்பட்டது.<br>இப்பணியானது மிகவும் அத்தியாவசிய பணியாக இருப்பதால் ஏற்கனவே, காலை உணவுத் திட்ட தயாரிப்பு பணியினை மேற்கொள்ளும் செந்தளிர் ஏரியா லெவல் ஃபெடரேஷன் என்ற நிறுவனத்திற்கு மொத்த 14 பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் 1177 பேருக்கு காலை உணவு தயாரிப்பதற்கு உத்தரவு வழங்கலாம். மாணவர் ஒருவருக்கு ரூ.12.70/- பைசா காலை உணவுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 1177 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.14948/- செலவு ஏற்படும். மாதம் ஒன்றுக்கு ரூ. 448440/- ஆகும். ஒரு ஆண்டுக்கான செலவினம் ரூ. 53,81,280/- செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, மாண்புமிகு.முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு ஒரு வருடத்திற்கான உத்தேச செலவினமாக ரூ. 55,00,000/- வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மாண்புமிகு. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் அரசின் முன்னோடி திட்டமாகும். எனவே, பள்ளி மாணவ / மாணவியர் நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 30.05.2025 | 623 | **<u>மன்றப்பொருள்: 21</u>**<br>களக்காடு நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு மற்றும் குடிநீர் பிரிவுகளில் அளவுகோலிலின் படி போதுமான அடிப்படைப்பணியாளர்கள் இல்லை என்பதால் அப்பணிகளை ஏற்கனவே செய்துவரும் களந்தை சுயஉதவிகுழு உறுப்பினர்கள் தொடர்ந்து | அலுவலக குறிப்பின்படி அரசு விதிமுறைப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | மகாத்மாகாந்தி சுயஉதவிக்குழு என்றபெயரில் தங்களுக்கு தினக்கூலி பணிவாய்ப்பு கோரி கடிதம் வழங்கியுள்ளனர். மேற்படி அடிப்படை பணிகளை இக்குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கொள்ளவும், அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்படும் தினக்கூலி தொகையினை ஊதியமாக வழங்கவும் இக்குழு உறுப்பினர்கள் 20 நபர்களை 01.04.2025 முதல் 31.03.2026 வரையில் தினக்கூலிஅடிப்படையில் பணிவாய்ப்பு வழங்க மன்ற அனுமதிக்காக.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இந்நகராட்சியில் குடிநீர் திட்டம், பொதுசுகாதாரம் போன்ற அடிப்படை பணிகளை மேற்கொள்ள போதுமான அடிப்படை பணியாளர்கள் இல்லை என்பதால் மேற்கண்ட பதிவு பெற்ற சுயஉதவி குழு உறுப்பினர்களை கொண்டு இந்நகராட்சி அடிப்படை பணிகளை மேற்கொள்ள ஒப்புக்கொள்ளலாம். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்காளல் பரிந்துரைக்கப்படும் தினக் கூலியினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க ஒப்புக்கொள்ளலாம். | |